## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## SESSIONS CASE NO. 131/2021

## Deposition of Witness for : PW 1

**Name** : திரு. ரவி
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 29-04-2022.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது மங்கலம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது சென்னையில் டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். ஆனால் என்னுடைய குடும்பம் தற்போதும் மங்கலத்தில் உள்ளார்கள். இறந்து போன ரமேஷ் என்னுடைய தம்பி. ஆஜர் எதிரிகளை தெரியும். சரண்யா என்பவர் இறந்து போன என் தம்பியின் மனைவி ஆவார். 3ம் எதிரி ராஜசேகர், 2ம் எதிரி சரண்யாவின் அண்ணன். 1ம் எதிரி 2ம் எதிரியுடன் கள்ளத்தொடர்பு வைத்திருந்தார். அதன் காரணமாக என் தம்பி ரமேஷூக்கும் 2ம் எதிரிக்கும் அடிக்கடி சண்டை வரும். அவர்களின் கள்ளத்தொடர்பும் நீடித்து வந்தது. கடந்த 7.2.2017ந் தேதி இரவு என் தம்பி இறந்து விட்டார் எனக்கு தகவல் வந்தது. அதன் பிறகு நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அந்த புகார் மனு அ.சா. ஆ.1 ஆகும். 2ம் எதிரி 1ம் எதிரியுடன் கள்ளத் தொடர்பு ஏற்பட்டு 3ம் எதிரியின் துணை கொண்டு என் தம்பியை அடித்து கொலை செய்து விட்டார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை

ஒம்/- ரவி

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**<u>SESSIONS CASE NO. 131/2021</u>**

**<u>Deposition of Witness for : PW 2</u>**

**Name** : திருமதி. மீனா
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 29-04-2022.**

**<u>முதல் விசாரணை</u> -**

நான் தற்போது மங்கலம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 என் தம்பி ஆவார். இறந்து போன ரமேஷும் என் தம்பி ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். 2ம் எதிரி என் தம்பி ராமேஷின் மனைவி ஆவார். 3ம் எதிரி 2ம் எதிரியின் அண்ணன். 1ம் எதிரி 2ம் எதிரியுடன் கள்ளத் தொடர்பில் இருந்து வந்தார். அதை குறித்து என் தம்பி ரமேஷ் சரண்யாவையும், கார்த்தியையும் கண்டித்தார். சம்பவத்திற்கு 1 வருடத்திற்கு முன்பு 1ம் எதிரி, இறந்து போன ரமேஷை கத்தியால் குத்த வந்தார். நாங்கள் அனைவரும் சமாதானம் செய்து வீட்டிற்கு அழைத்து வந்தோம். இதன் காரணமாக 2ம் எதிரி என் தம்பியுடன் சண்டைபோட்டுக்கொண்டு தாய் வீட்டிற்கு சென்று விட்டார். 2ம் எதிரியை நாங்கள் சமாதானம் செய்து குடும்பம் நடத்த அழைத்து வந்தோம். தனியாக ஒரு வீடு எடுத்து இருவரையும் குடும்பம் நடத்த அமர்த்தினோம். நானும், 2ம் எதிரி சரண்யாவும் நூல் மில்லுக்கு வேலைக்கு சென்று வந்தோம். சம்பவம் நடப்பதற்கு முன்பு அன்று இரவு 8 மணிக்கு என் தம்பி ரமேஷும், சரண்யாவும் தெருவில் சண்டை போட்டுக் கொண்டு இருந்தார்கள். 2ம் எதிரி சண்டையின் போது என்றைக்கு இருந்தாலும் உன்னை நான் சாவடித்துவிடுவேன், உன் உயிர்நாடியை அறுத்து விடுவேன் என்று கூறினார். நான் 2ம் எதிரியிடன் நீ உன் வீட்டிற்கு சென்று விடு என்றும், என் தம்பியிடம் சண்டை போடாதே என்று கூறி சென்று விட்டேன். மறுநாள் காலை 2ம் எதிரியை வேலைக்கு அழைத்தேன். அதற்கு இரவு முழுவதும் என் தம்பி 2ம் எதிரியிடம் சண்டையிட்டார் என்றும், அதனால் நான் வேலைக்கு வரவில்லை என்று கூறினார். அவர்கள் குடியிருந்த வீடு பூட்டப்பட்டு இருந்தது. பக்கத்து வீட்டில் இருந்து 2ம் எதிரி வந்து மேற்சொன்ன சங்கதியை என்னிடம் கூறினார். நானும்

வீட்டு வேலை இருப்பதால் வேலைக்கு வரவில்லை என்று நூல் கம்பெனிக்கு வரவில்லை என்று கூறிவிட்டேன். நான் வீட்டில் இருந்த போது 2ம் எதிரி என்னை அவர் வீட்டிற்கு அழைத்தார். நான் சென்று பார்த்த போது என் தம்பியை அடித்து போட்டு உடம்பு முழுவதும் ரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார். நான் கத்தி கூச்சல் போட்டேன். 2ம் எதிரியும், 3ம் எதிரியும் ரமேஷ் உடலை இருசக்கர வாகனத்தில் வைத்து மருத்துவமனை அழைத்து செல்வதாக கூறினார். அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் செத்து போன பிணத்தை நீ ஏன் மருத்துவமனைக்கு எடுத்து செல்கிறாய் நீ தான் அவனை சாவடித்துவிட்டாயே என்று ஜனங்கள் கூறினார்கள். ரமேஷின் உடலை அருகில் இருந்த புளியமரத்தடியில் போட்டு விட்டார்கள். போலீசார் வந்து ரமேஷின் உடலை மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள். என் தம்பியின் சாவிற்கு 1ம் எதிரிதான் காரணம். 1ம் எதிரியின் கள்ளத்தொடர்பினால் தான் என் தம்பி இறந்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள் நான் நடந்ததை கூறினேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை

ஓம்/- மீனா

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.